1983 பிப்ரவரி 5]

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் மூலம் தனி வியாபாரிகளுக்கு விற்கப்படும் பூச்சி மருந்துகள், உரங்கள்.

*வினா எண். 147.—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் மூலம் பூச்சி மருந்துகள், உரங்கள் தனி வியாபாரிகளுக்கு (Private Dealers) விற்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் வரும் ஆண்டுகளில் நேரிடையாக பூச்சி மருந்துகள், உரங்கள் விற்கப்படுமா?

(இ) மதுராந்தகம் தாய் நிறுவனத்தில் பூச்சி மருந்துகள் மற்றும் உரங்கள் தனியாருக்கு எவ்வளவு சென்ற ஆண்டு விற்கப் பட்டது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) ஏற்கனவே விற்பனை நிலையங்கள் மூலமாக விற்கப் பட்டு வருவது போல் வரும் ஆண்டுகளிலும் விற்கப்படும்.

(இ) பூச்சி மருந்துகள், BHC 10 துகள்கள் 136 மெ. டன்னும், DD. 25% E. C. 280 லிட்டரும், MAI TAX 63% E. C. 280 லிட்டரும், 266 மெ. டன் உரங்களும் தனி வியாபாரி களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

(முற்பகல் 9-30)

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை பருவ காலத்திலே இதைப்போன்ற உரங்கள், பூச்சி மருந்துகள் கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுவதை அரசு அறியுமா? அதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அவ்வாறு புகார் வரவில்லை. வந்தால், நடவடிக்கை எடுக்க லாம்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பூச்சி மருந்துகளின் விலை குறுகிய காலத்தில் அதிகமாக ஏற்றப்பட்டிருக்கிறது. எனவே, விவசாயிகள் அதிக விலைக்கு இவைகள் விற்கப்படுவதாகக் கருதுவதோடு அல்லாமல், தனிப் பட்ட முறையில் இவை அதிக விலைக்கு விற்கப்படுவதாக மக்கள் மத்தியிலேயும் கருத்து நிலவி வருவதை அரசு அறியுமா? எனவே, அதைக் குறைக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே. இது மூலக் கேள்விக்குத் தொடர்பு அற்றது. ஆனால், நிலைமையை அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகள் தரமாக இல்லாததன் காரணமாக, பயிர்கள் பாதுகாக்கப்படுவதற்குப் பதிலாக, பூச்சிகளே அந்த மருந்துகளை சாப்பிட்டுவிட்டு, கொழுத்துப்போய், அந்த பூச்சிகளே பயிர்களை மிக விரைவாக அழிப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே, அந்தப் பூச்சி மருந்துகளை பரிசீலிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, முன்வரும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பூச்சி மருந்துகளை விவசாயிகளுக்குக் கொடுப்பதிலே ஒரு பிரிவினருக்கு மானிய விலையில் கொடுப்பதினால், ஏராளமான தவறுகள் நடைபெறுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அதனால் எல்லாப் பூச்சி மருந்துகளையும், எல்லா விவசாயிகளுக்கும் எந்த அளவில் மானிய விலையில் கொடுக்க முடியுமோ அந்த அளவில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எல்லா விவசாயிகளுக்கும், எல்லா பூச்சி மருந்துகளையும் அவ்வாறு தர இயலாது. சிறு விவசாயிகளுக்கு, வறட்சிப் பகுதிகளிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு என்ற வகையில் முறைப்படுத்தி, எந்தெந்த திட்டத்திற்கு மானியம் இருக்கிறதோ, அந்தந்த திட்டத்தின் மூலம் நாம் செயல் படுத்த முடியும்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, பூச்சி மருந்தில் டி.டி.டி. 25% விற்பனை செய்யப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். உலகில் பல பகுதிகளில், அதனுடைய ரெசிடியூவல் எபெக்ட் அதாவது விஷத் தன்மை இருப்பதால், மக்களுக்கும், மற்ற ஜீவ ஜந்துக்களுக்கும் அது ஆபத்தை விளைவிக்கின்ற காரணத்தினால், அது தடை செய்யப்பட்டிருப்பது உண்மையா? அப்படியிருந்தால், அதை இங்கு மட்டும் அனுமதிக்க காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தனியாகத் கேள்வி போடவேண்டும்.